# தேவரகசியம்

வெளிப்படுத்தின விசேஷம் 10:6



# பொருளடக்க அட்டவணை

பொருளடக்க அட்டவணை




2 இயற்கைக்கு மேம்பட்டக் காரியம்

8 நியாயத்தீர்ப்பு

12 நாமம்

16 ஜீவியத்திற்குப் பிறகு

22 மூலபாவம்

28 கர்த்தருடைய பயங்கரமுமான நாள்

34 வார்த்தை



www.செய்தி.net

or

VOICE OF GOD RECORDINGS
INDIA OFFICE
No 28, Shenoy Road,
Nungambakkam, Chennai – 600 034, South India


தேவன் வேதாகமத்தில் செய்தது போன்ற வல்லமையான கிரியைகளை இன்னமும் அவர் செய்கிறாரா?

நீங்கள் ஏன் ஞானஸ்நானம்பண்ணப்பட வேண்டும் என்று உங்களை நீங்களே எப்போதாவது கேட்டுக்கொண்டதுண்டா?

நீங்கள் ஒரு சபையின் அங்கத்தினராயிருக்கின்றபடியால், நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று பொருள்படுமா?

ஏதேன் தோட்டத்தில் உண்மையாகவே சர்பத்திற்கும் ஏவாளுக்குமிடையே நடந்தது என்ன?

இந்தக் கடைசி நாட்களில் தேவரகசியம் நிறைவேறும் என்ற வேதாகம வாக்குத்தத்தங்களை நீங்கள் அறிவீர்களா?

இதுவே இரகசியங்கள் திறக்கப்பட்டு, உலகத்திற்கு வெளிப்படுத்தப்பட வேண்டிய நேரமாயுள்ளது.

**நீங்கள் உண்மையான தேவனுடைய வார்த்தையைக் கேட்க ஆர்வமாயிருக்கிறீர்களா?**

ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும்.

வெளிப்படுத்தின விசேஷம் 10:6

# இயற்கைக்கு மேம்பட்டக் காரியம்

இயற்கைக்கு மேம்பட்டக் காரியம்

யோவான் 14:12

*மெய்யாகவே மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.*

மாற்கு 16:17-18

*விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;*

*சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.*

நாம் எல்லோருமே வேதாகமத்தின் பக்கங்களைத் திருப்பி, தேவன் அற்புதங்களை செய்கிறார் என்பதைக் காணமுடியும்: மோசே சிவந்த சமுத்திரத்தைப் பிளந்தார், எலியா ஒரு பஞ்சத்தை வருவித்தான், இயேசு ஜலத்தின் மேல் நடந்தார், சீஷர்கள் வியாதியஸ்தரை சுகப்படுத்தினர்.

ஆயிரக்கணக்கான அற்புத நிகழ்ச்சிகள் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. தேவன் அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் சாட்சிப் பகருவாரேயானால், அப்பொழுது இன்றைக்கு அவருடைய அற்புதங்கள் எங்கே? அவர் வேதத்தில் குஷ்டரோகத்தை சுகப்படுத்தினதுபோன்று புற்றுநோயை அவரால் சுகப்படுத்த முடியுமா? பால்வினை நோய்கள் (AIDS) அல்லது குளிர் காய்ச்சலைக் (Malaria) குறித்து என்ன? அவரால் இன்னமும் ஒரு அற்புதத்தை நிகழ்த்த முடியுமா? ஆம், தேவன் இன்னமும் அற்புதங்களை நிகழ்த்துகிறார். விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின்தொடர்கின்றன.

*இப்பொழுது, நண்பர்களே பாருங்கள், இங்கிலாந்தின் ஜார்ஜ் மன்னனைக் குறித்து சிந்தித்துப்பாருங்கள். நாம் அவருக்காக ஜெபித்தபோது, அவர் உடலில் பல திசுக்கள் இறுகிபோயிருந்த நோயிலிருந்து சுகமாக்கப்பட்டார். பிளாரன்ஸ் நைட்டிங்கேலைக் குறித்து நினைத்துப் பாருங்கள், (அவளுடைய பாட்டி செஞ்சிலுவை சங்கத்தினை நிறுவியவர்) அவள் ஏறக்குறைய அறுபதே பவுண்டு எடையோடு வயிற்றின் முன்சிறுகுடல் புற்று நோயினால் படுக்கையாய்க் கிடந்து மரித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு சிறு புறா அங்குள்ள புதருக்குள்ளாக பறந்து செல்ல, தேவ ஆவியானவர் வந்து, "கர்த்தர் உரைக்கிறதாவது, அவள் பிழைப்பாள்" என்றுரைத்தார், அவள் நூற்றைம்பத்தைந்து பவுண்டுகள் எடைகொண்டவளாய் பரிபூரண ஆரோக்கியத்துடன் இருக்கிறாள்.*

*வருடக்கணக்கில், அறுபத்தாறு வருடங்களாக சக்கர நாற்காலியிலும், படுக்கையிலும் இருந்த காங்கிரஸ்காரர் உப்ஷா அவர்களைக் குறித்து நினைத்துப் பாருங்கள். ஒரு கணப்பொழுதில் தன்னுடைய காலூன்றி எழும்பி, தரையைத் தொட்டு, இயல்பான நிலைக்குள்ளாகி பரிபூரண குணமடைந்தார்.*

*குணமாக்கப்பட்டிருக்கிற கோடிக்கணக்கான ஜனங்களைக் குறித்து நினைத்துப்பாருங்கள். எனவே நாம் மரிக்கும்வரை இங்கேயே ஏன் அமர்ந்திருக்க வேண்டும்? அதைக் குறித்தான ஒரு காரியத்தை நாம் செய்வோமாக.*

நீங்கள் சுகவீனமாயிருந்தால் அல்லது தேவையுள்ளவர்களாயிருந்தால் விசுவாசமுடையவர்களாயிருங்கள். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது. ஆகையால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவரால் ஒரு அற்புதத்தை நிகழ்த்த முடிந்ததனால், இப்பொழுது அவரால் அதே அற்புதத்தை நிகழ்த்த முடியும். நாம் குணமாக்கப்பட்டிருக்கிறோம் என்றே அவர் நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார். நாம் மாத்திரம் விசுவாசிப்போமேயானால் நலமாயிருக்குமே.

***வில்லியம் D உப்ஷா***
அவர்கள் ஐக்கிய நாடுகளின் பாராளுமன்ற பிரதிநிதிகளின் குழுவில் எட்டு ஆண்டுகள் பணியாற்றி, 1932-ல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். அவர் ஒரு சிறு குழந்தையாயிருந்தபோது ஒரு விவசாய நிலத்தில் உண்டான விபத்தினால் அவருக்கு முடக்குவாதம் ஏற்பட்டு, 66 ஆண்டுகளாக அவர் கக்கத்தண்டுகளினாலோ அல்லது ஒரு சக்கர நாற்காலியிலோ காலத்தை கழித்தார். ஆனால் 1951-ம் ஆண்டில் பூரண குணமடைந்து எஞ்சியுள்ள தன்னுடைய வாழ்நாட்களில் பரிபூரணமாய் நடந்தார்.





புகழ்பெற்ற மருத்துவச்சியின் தூரத்து சொந்தக்காரியான ***பிளாரன்ஸ் நைட்டிங்கேல்*** வயிற்றுப் பகுதி முழுவதும் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு அவதியுற்றார். அந்த புற்றுநோய் அவளுடைய உயிரை பறித்துக்கொள்வதற்கு முன்னர் ஜெபிக்கும்படியான தன்னுடைய கடைசி மன்றாட்டோடு இந்தப் புகைப்படத்தையும் அனுப்பி வைத்தாள். 1950-ம் ஆண்டு கர்த்தராகிய இயேசு அவளை சுகப்படுத்துவதற்கு முன்பு அவள் மரணத்தின் விளிம்பில் இருந்ததை உங்களால் காண முடியும். அவளுடைய சுகமளித்தலுக்குப் பின்னர் அடுத்தப் புகைப்படம் எடுக்கப்பட்டு, தேவன் இன்னமும் வியாதியஸ்தரை சுகப்படுத்துகிறார் என்பதற்கு ஒரு சாட்சியாக அனுப்பினார்.








டிரிஸ் கிரிஃபின் 2013-ம் ஆண்டின் துவக்கத்தில் தன்னுடைய முதுகு வலியின் காரணமாக மருத்துவரின் அலுவலகத்திற்கு சென்றாள். மேலும் புற்று நோயுடன் அவளுக்கிருந்த போராட்டம் மீண்டும் நிகழக்கூடுமா என்று அவள் பயமுற்றிருந்தாள். அப்பொழுது MRI என்ற மருத்துவப் பரிசோதனை நிழற்படம் அவளுடைய இருதயத்தில் உள்ளே “பெருந்தமனிப் பிளவு ஏற்பட்டுள்ளது” என்பதைக் காண்பிக்க, அது மருத்துவர்களை கூடுதலான பரிசோதனைகளைச் செய்யும்படி செய்து, அடுத்த நாள் அவசர அறுவைச் சிகிச்சையை ஏற்பாடு செய்துவிட்டது. அந்த இருதய நிழற்படத்தில் கோடிட்டு காட்டப்பட்டுள்ள வெளிப்படையான துவாரங்கள் மேலும் பிளவுறுமேயானால் நிச்சயமாகவே உடனடியாக மரணம் நேரிடும் என்பதையே பொருட்படுத்தினது.



அதற்கு அடுத்த நாள் விசுவாசிகள் அவளுக்காக ஜெபித்தப் பின்னர், மருத்துவர்கள் அறுவை சிகிச்சைக்கு முன் சரியாக அந்த துவாரப் பகுதியைக் கண்டறிய மற்றொரு CT Scan என்ற பரிசோதனை நிழற்படத்தை எடுத்தனர். இம்முறையோ அந்த நிழற்படத்தில் பரிபூரண ஆரோக்கியமான இருதயமே காட்டப்பட்டது. எனவே மருத்துவர் குழப்பமுற்று, திருமதி. கிரிப்பின் அவர்களிடம், "நான் உங்களுக்கு என்ன சொல்வதேன்றே தெரியவில்லை. உங்களுக்கு பெருந்தமனி பிளவு இருந்தது. ஆனால் இப்பொழுது அந்த ஆதாரம் மறைந்துபோய்விட்டது" என்று கூறிவிட்டார். மேலும் அவர் ஜெபத்திற்கு முன்னால் எடுத்த படங்களைக் காண்பித்துவிட்டு, அதற்குப் பின்னர், "நீங்கள் அறுவை சிகிச்சையில்லாமலேயே போகலாம், ஏனெனில் புற்றுநோயின் அடையாளமே இல்லை. நீங்கள் பரிபூரண ஆரோக்கியத்துடன் இருக்கிறீர்கள்" என்று கூறிவிட்டார்.





(இடது) மருத்துவருடைய அம்புக் குறியீடு அந்தப் பெருந்தமனியைக் காண்பித்துக்கொண்டிருக்கிறது. அது அந்தப் படத்தின் மையத்தில் கருப்பாக உள்ளது. எதிர்கோணங்களைச் சேர்க்கும் வரிசையினூடாக உள்ள அந்த இரத்தக் குழாயின் நெளிவு அல்லது பெருந்தமனியின் பிளவிற்கு உடனடியான அறுவை சிகிச்சைத் தேவைப்பட்டது. மேலும் அந்தப் பிளவு தகர்வுறுமேயானால், அது அபாயகரமாயிருக்கும். (மேலே காணப்படுகிறது) அதற்கு அடுத்த நாள் எடுக்கப்பட்ட இரண்டாம் நிழற்படமாகும். அதில் அந்தப் பிளவு முற்றிலும் மறைந்து ஒருபோதும் காணப்படவேயில்லை.



## சான்றாதாரங்கள்

சங்கீதம் 103:2-3

*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து,* ***உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,***

ஏசாயா 53:5

*நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது;* ***அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.***

மாற்கு 16:17

***விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன****: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;*

லூக்கா 17:6

*அதற்குக் கர்த்தர்:* ***கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால்****, நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.*

யோவான் 14:12

*மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.*

1 தெசலோனிக்கேயர் 1:5

*எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல,* ***வல்லமையோடும்****, பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே.*

எபிரெயர் 2:3-4

*முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்,*
***அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும்*** *பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும்,* ***தேவன் தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற*** *இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்.*

எபிரெயர் 13:8

*இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.*

யாக்கோபு 5:15

*அப்பொழுது* ***விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்****; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.*

1 பேதுரு 2:24

*நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்;* ***அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.***

# நியாயத்தீர்ப்பு

சங்கீதம் 96:13
அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

இன்றைக்கு உலகத்தில் ஆயிரக்கணக்கான வித்தியாசமான ஸ்தாபனங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மதமும் மற்றொன்றை குற்றஞ்சாட்டுகிறது, அதே சமயத்தில் அவைகள் அனைத்துமே தங்களுடைய ஸ்தாபனத்தினூடாகவே இரட்சிப்பு உண்டு என்று வாக்களிக்கிறார்கள். எந்த ஒன்றை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை நாம் எப்படி அறிந்துகொள்வோம்?

நாம் கத்தோலிக்க சபையைத் தெரிந்துகொள்வோமேயானால், அப்பொழுது நாம் பரிசுத்தவான்களின் பரிந்துபேசுதலை ஏற்றுக்கொள்கிறோம். அது விக்கரகங்களிடம் மன்றாடுவதேயன்றி வேறொன்றுமில்லை. வேதமோ, "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" என்று கூறுகிறது. (1தீமோ. 2:5) கத்தோலிக்க மதகுரு "பிதா" என்று அழைக்கப்படுகிறார், அது மத்தேயு 23:9-ல், "'பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்;' என்று இயேசுவானவரால் கூறப்பட்டு தடுக்கப்பட்டிருந்ததே. 'பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்.'" பவுல், "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்" என்று (1 கொரி.13:1)-ல் கூறியிருக்கும்போது, அசெம்பலீஸ் ஆஃப் காட் என்ற ஸ்தாபனத்தினர் அந்நிய பாஷையில் பேசுவதே பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கான முதல் அடையாளம் என்று கூறுகிறார்கள்.



ஏறக்குறைய எல்லா ஸ்தாபனங்களுமே வேதாகமத்தில் அநேகக் காரியங்கள் தவறாக வியாக்கியானிக்கப்பட்டிருக்கின்றன என்றும், மொழிபெயர்ப்பில் விடப்பட்டுள்ளது அல்லது இன்றைய உலகத்தில் நடைமுறைக்கு பயன்படாது என்றும் உடனடியாக நமக்கு கூறிவிடுகின்றனர். ஆகையால் நாம் வேதாகமத்தை விசுவாசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோமா அல்லது ஸ்தாபன கோட்பாடுகளையா? தேவன் நியாயத்தீர்ப்பிற்கான ஒரு ஆதாரச் சட்டமாக எதைப் பயன்படுத்துவார்?

*இன்றிரவு இங்கே நான் கத்தோலிக்கரிடம், "தேவன் எதைக் கொண்டு உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று கேட்டால், அதற்கு கத்தோலிக்கரோ, "கத்தோலிக்க சபையைக் கொண்டே" என்று கூறுவார். சரி, இப்பொழுது எந்த கத்தோலிக்க சபையைக் கொண்டு நியாயந்தீர்ப்பார்? இப்பொழுதோ அவர்கள் ரோமர்களையும், வைதீக கிரேக்கரையும், இன்னும் அவர்கள் அநேகரையும் உடையவர்களாயிருக்கிறார்களே. அப்பொழுது அது எந்த கத்தோலிக்க சபையாய் இருக்கும்? லூத்தரன்களோ, "எங்களைக் கொண்டே" என்று கூறுகிறார்கள், அப்படியானால் பாப்டிஸ்டுகளாகிய நீங்கள் புறம்பாக்கப்படுகிறீர்கள். அப்படியானால் நாம், "பாப்டிஸ்டுகளைக் கொண்டே" என்று கூறுவோமேயனால், அப்பொழுது பெந்தேகோஸ்தேக்களாகிய நீங்கள் புறம்பாக்கப்படுகிறீர்கள். ஆகையால் அது எப்பேர்ப்பட்ட ஒரு குழப்பமாய் இருக்கும். என்ன செய்ய வேண்டும் என்பதை எவருமே அறிந்து கொள்ளமாட்டார்கள்; ஆகையால் அவர் உலகத்தை சபையைக் கொண்டு நியாயந்தீர்ப்பதாக ஒருபோதும் வாக்களிக்கவேயில்லை.*

*அவர் உலகத்தை கிறிஸ்துவைக் கொண்டே நியாயந்தீர்ப்பதாக வாக்களித்தார், கிறிஸ்து வார்த்தையாயிருக்கிறார். உலகத்தை நியாயந்தீர்ப்பது வேதாகமமாயுள்ளது, அது நேற்றும் இன்றும் என்றும் மாறாததாயிருக்கிற இயேசு கிறிஸ்துவாகும்.*

## சான்றாதாரங்கள்

யோவான் 1:1

*ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.*

யோவான் 1:14

***அந்த வார்த்தை மாம்சமாகி**, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*

யோவான் 5:22

*பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், **நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.***

யோவான் 12:48

*என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; **நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.***

எபேசியர் 1:5-7

*பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக,*
*தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.*
***அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.***

எபேசியர் 2:5-8

***அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.***
*கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக,*
*கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.*
*கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;*

1 யோவான் 1:7

*அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய **இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.***

வெளிப்படுத்தின விசேஷம் 22:18-19

*இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார்.*
*ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்.*





# நாமம்

மாற்கு 16:16

*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

அப்போஸ்தலர் 2:38

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

வெளிப்படையாகவே, ஞானஸ்நானம் மிகவும் முக்கியமானதாயுள்ளது, ஆனால் நாம் எப்படி ஞானஸ்நானம்பண்ணப்பட்டிருக்கிறோம் என்பதே முக்கியத்துவமுடையதாயிருக்கிறது. சரியான ஞானஸ்நானம் ஒன்று உண்டா அல்லது ஏதாவது ஒன்று கிரியை செய்யுமா? நீங்கள் வேதாகமத்தை விசுவாசிப்பீர்களேயானால், அப்பொழுது ஆம், சரியான ஞானஸ்நானம் ஒன்று உண்டு.

பெரும்பாலான சபைகள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கின்றன. ஆனால் இது வேதத்தின்படியான சரியான ஞானஸ்நானம் அல்ல.

அப்போஸ்தலர் 19-ம் அதிகாரத்தில் உறுதியாக இயேசுகிறிஸ்துவின்மேல் ஏற்கெனவே விசுவாசமாயிருந்த ஜனங்கள் இருந்தனர். ஆனால் அதே சமயத்தில் அவர்கள் தங்களுடைய இருதயங்களில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளாமலிருந்தனர். பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வதற்கான சரியான வழியை அப்போஸ்தலனாகிய பவுல் அறிந்திருந்தான். ஆகையால் அவன் அவர்களிடத்தில், “*அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்?*” என்று கேட்டான். அதற்கு அவர்கள், “*யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம்*” என்றார்கள். (அப்போ.19:3). அவர்கள் அப்போஸ்தலர் 2:38-ல் உள்ள பேதுருவின் கட்டளைப்படி ஞானஸ்நானம்பண்ணப்பட்டிருக்கவில்லை என்பதை பவுல் கண்டான். எனவே அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் மறுபடியும் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டுமென்று கட்டளையிட்டான். அதன்பின்னர் வாக்குத்தத்தம்





பண்ணப்பட்டிருந்தபடியே அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டனர்.

ஆகையால் இயேசுவானவர்தாமே சீஷர்களிடத்தில் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ("நாமங்களில் அல்ல") ஞானஸ்நானங்கொடுக்கும்படிக் கூறியிருந்தபோது, அவர்கள் ஏன் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானங் கொடுத்தனர்? (மத்தேயு 28:19)அவர்கள் ஒரு தவறு செய்துவிட்டார்களா? இல்லையே! அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தபடியே அவர்கள் சரியாகச் செய்திருந்தனர்.

நீங்கள் இந்தக் கைப்பிரதியில் வரும் கட்டுரையை வாசிக்கையில், உங்களுடைய பெயரைக் குறித்து சிந்தியுங்கள். நீங்கள் ஒரு குமாரனாய் இருக்கிறீர்களா? அப்படியானால் உங்களுடைய பெயர், "குமாரனா?" நீங்கள் ஒரு தாயாக இருக்கிறீர்களா? அப்படியானால் உங்களுடைய பெயர் "தாயாரா?". நிச்சயமாக அப்படியில்லை, அவைகள் வெறுமென பட்டங்கள். உங்களுக்கு ஒரு உண்மையான பெயர் உண்டு. அவ்வண்ணமாகவேத்தான் தேவனும் செய்கிறார்.

பதிலோ இங்கே உள்ளது:

> *பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் எப்போதாவது எவரேனும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள் என்ற அப்படிப்பட்ட ஒரு காரியமே வேதத்தில் கிடையாது; ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு காரியமேக் கிடையாது. பிதா என்பது நாமமல்ல; குமாரன் என்பது நாமமல்ல; பரிசுத்த ஆவி என்பது நாமமல்ல; ஆனால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்பதாயுள்ளது.*

இயேசுகிறிஸ்துவே தேவன். அவரே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாயிருக்கிறார்.

நீங்கள் பரிசுத்த ஆவியைத் தேடிக்கொண்டிருந்தால், கர்த்தர் இன்னும் அதை உங்களுக்கு ஏன் கொடுக்காமலிருக்கிறார் என்று வியப்புற்றால், அப்பொழுது பவுல், "அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்" என்று கேட்ட அதேக் கேள்வியையே நீங்களும் உங்களை கேட்டுக்கொள்ளலாம்.



## சான்றாதாரங்கள்

மத்தேயு 28:19

*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,* [பிதாவினுடைய பெயர் என்ன? குமாரனுடைய பெயர் என்ன? பரிசுத்த ஆவியினுடைய பெயர் என்ன?]

மாற்கு 16:16

*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

யோவான் 5:43

***நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை,*** *வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்.* [அவர் தம்முடைய பிதாவினுடைய நாமத்தில் வந்திருந்தால், அப்பொழுது அவருடைய நாமம் என்ன?]

யோவான் 10:30

*நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.*

யோவான் 12:45

*என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான்.*

யோவான் 14:8-9

*பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே,பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்.*

*அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா?* ***என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்?***

யோவான் 20:27-28

*பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்.*

*தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக:* ***என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்.***

அப்போஸ்தலர் 2:38-39

*பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி,* ***ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்,*** *அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*

***வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி;***

அப்போஸ்தலர் 4:12

*அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.*

அப்போஸ்தலர் 8:12

*தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து,* ***பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது,*** *புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

அப்போஸ்தலர் 19:3-6

*அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்.*

*அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்.*

*அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய* ***இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.***

*அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*

எபேசியர் 4:5

*ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும்,* ***ஒரே ஞானஸ்நானமும்,***

கொலேசெயர் 3:17

*வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்.*

1 யோவான் 5:7

*பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே,* ***இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;***

# ஜீவியத்திற்குப் பிறகு

யோவான் 5:28-29

இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.

நம்மில் ஒவ்வொருவரும் வரப்போகும் ஒரு நாளில், கிறிஸ்தவர்களாயிருந்தாலும் அல்லது மற்றவர்களாயிருந்தாலும், காலத்தின் திரைக்குப் பின்னால் என்ன உள்ளது என்பதை சரியாக கண்டு கொள்வோம். வேதம் சிலருக்கு நித்திய ஜீவனை வாக்களிக்கிறது, மற்றவர்களுக்கு அது ஆக்கினைத்தீர்ப்பையே வாக்களிக்கிறது. சரித்திரத்தினூடாக வாழ்ந்து வந்துள்ள ஒவ்வொரு மானிடனும், “நான் மரிக்கும்போது எனக்கு என்ன சம்பவிக்கும்?” என்று நிச்சயமாகவே தனக்குதானே கேட்டுக்கொண்டு வந்திருக்கிறான்.

வாசிப்பதற்கு வேதாகமம் என்ற ஒன்று இருப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, தீர்க்கதரிசியாகிய யோபு இயற்கையைக் கவனித்துப் பார்த்தான். அவன் ஒரு மரத்தின் நம்பிக்கையை, அதாவது அது எப்படி வெட்டிப் போடப்பட்டு மரித்தாலும், அதே சமயத்தில்தண்ணீரின்வாசனையினால் அது துளிர்த்து, இளமரம் போலக் கிளைவிடும் என்பதைக் குறித்துப் பேசினான். யோபு ஒரு மனிதன் மரத்தைப் போலவே ஜீவனோடு மீண்டும் உயிர்த்தெழுவான் என்பதை அறிந்திருந்தான்:

*மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்.*

*என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக.*

*இப்பொழுது என் நடைகளை எண்ணுகிறீர்; என் பாவத்தின்மேலல்லவோ கவனமாயிருக்கிறீர்.* (யோபு 14:14-16)

யோபு வாசிக்க ஒரு வேதம் இல்லாமலிருந்திருக்கலாம், ஆனால் மானிட இனத்தின் மீட்பர் வரும்போது, தேவன் அவனை கல்லறையிலிருந்து உயிர்த்தெழச் செய்வார் என்பதை அவன் அறிந்திருந்தான்.

*ஆ, நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்; அவைகள் ஒரு புஸ்தகத்தில் வரையப்பட்டு,*

*அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் கருங்கல்லிலே உளிவெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாயிருக்கும்.*

*என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.*

*இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்.* (யோபு 19:23-26)

தீர்க்கதரிசி கர்த்தராகிய இயேசுவைக் குறித்தும், அவருடைய ஜனங்களின் உயிர்த்தெழுதலையுங் குறித்துமே பேசிக்கொண்டிருந்தார். நம்முடைய சரீரங்கள் முற்றிலும் அழிந்து போனாலும், இயேசு நம்முடைய மாம்சத்தை திரும்ப அளிப்பார்

என்பதை வெளிப்பாட்டின் மூலம் யோபு அறிந்திருந்தான். நம்முடைய சொந்தக் கண்களினால் நாம் அவருடைய வருகையைக் காண்போம். எல்லா தேவனுடைய ஜனங்களுமே அந்த மகிமையின் நாளைக் காண வாஞ்சிக்கிறார்கள்.

எப்படியாயினும் தேவன் ஜீவிப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக பிசாசு என்ற ஒன்றும் கூட உண்டு. பரலோகம் இருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக நரகமும் கூட உண்டு. அதன் பங்கீடுபாடுகள் நம்மால் யூகித்துப் பார்க்க முடிந்ததைக் காட்டிலும் உயர்ந்தவை. அப்போஸ்தலனாகிய பவுல், *“எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை” என்று கூறினான்.* (I கொரி. 2:9)

நம்முடைய சிந்தனைகள் பரலோகம் எவ்வளவு மகத்தானதாயிருக்கும் என்று புரிந்துகொள்ள முடியாதது போன்றே நரகத்தின் பயங்கரங்களையும் அவைகள் புரிந்துகொள்ளவே முடியாது. நரகம் மிகவும் மோசமாயிருக்கும் என்றும், அந்த பயங்கரமான ஸ்தலத்திற்கு துணிந்து செல்வதைப் பார்க்கிலும் நம்முடைய சரீரத்தின் அவயத்தில் ஒன்றை நாம் தரித்துப்போடுவது மேலாயிருக்கும் என்று இயேசு நமக்குக் கூறினார்.

உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப்பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். (மாற்கு 9:43)

அப்படியானால் யார் பரலோகத்திற்கு செல்வார்? யார் நரகத்திற்கு செல்வார்? அது ஒரு வருத்தமான நினைவாயுள்ளது, ஆனால் அநேக ஜனங்கள் அவர் மனப்பூர்வமாய் அளிக்கும் பலனை பெற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று இயேசு கூறினார்: *இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது;* ***அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.*** (மத்தேயு 7:13-14)

“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: ***கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.*** *அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்” என்று இயேசுவும் கூட கூறினார்.* (மத்தேயு 7:21-23)

ஒரு நபர் கிறிஸ்தவ மார்க்கத்தை உரிமைக்கொண்டாடுகின்ற காரணத்தால் அவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என்பதை அது பொருட்படுத்துகிறதில்லை. ஆகையால் நம்முடைய சிந்தைகளில் உள்ள தெளிவானக் கேள்வி இதுவே; நாம் நித்திய ஜீவனை எப்படிப் பெற்றுக்கொள்கிறோம்? இயேசுவானவர் அதற்கான ஒரு பதிலை நமக்கு மிக எளிமையாக அளித்துவிட்டார்: ***என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு;*** *அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.* (யோவான் 5:24)

சந்தேகத்திற்கிடமின்றி இன்றைய உலகில் வெகு சில ஜனங்கள் மாத்திரமே தங்களுடைய இடைவிடா பணி நேரங்களிலும் மனப்பூர்வமாய் தேவனுடைய வார்த்தையைக் கேட்க செலவிடுகிறார்கள். அதிலும் ஒரு சிலரே தாங்கள் ஒருமுறை கேட்ட வார்தையையுங்கூட விசுவாசிப்பார்கள்.

நாம் ஒரு நல்ல நபராக, உறுதியாக சிந்திக்க வேண்டும் என்றும், பொய்யுரைக்கவோ, ஏமாற்றவோ அல்லது களவாடவோக்

கூடாது என்றும், அப்பொழுதே நாம் பரலோகத்திற்குச் செல்வோம் என்றும் சபைகள் கூறகின்றன. நரகமோ நல்ல வாழ்க்கைகளை வாழ்வதாய்த் தென்படும் ஜனங்களால் நிறைந்திருக்கும் என்பதை அவைகள் புரிந்துகொள்ளுகிறதில்லை. நாம் நம்முடைய நீதியான செய்கைகளின் நிமித்தமாகவோ அல்லது நாம் ஒரு குறிப்பிட்ட சபையின் அங்கத்தினராயிருக்கிற காரணத்தாலோ நாம் பரலோகம் சென்றுவிடமாட்டோம் என்பதே உண்மையாயுள்ளது. நித்திய ஜீவனுக்கு ஒரே ஒரு பாதை மாத்திரமே உண்டு, அது இயேசு கிறிஸ்து மூலமேயாகும். நாம் அவருடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டும் என்றும், அதுவே வேதம் என்றும் அவர் நமக்கு அறிவுறுத்தினார். மற்றபடி நாம் எப்படி இரட்சிக்கப்பட முடியும்?

உங்களுக்கான நியாயத்தீர்ப்பின் நாள் வரும்போது, நீங்கள், *“வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்”* என்பதைக் கேட்பீர்களா, (மத்தேயு 25:34) அல்லது நீங்கள், *“சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்”* (மத்தேயு 25:41) என்பதைக் கேட்கப் போகிறீர்களா?

இந்த வார்த்தைகளை உங்களுடைய கண்கள் வாசிக்கையில், நீங்கள் ஒரு தெரிந்துகொள்ளுதலைச் செய்ய வேண்டும். நீங்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதைத் தெரிந்துகொள்வீர்களா?

## நீங்கள் நித்தியத்தை எங்கே செலவழிப்பீர்கள்?

## சான்றாதாரங்கள்

யோபு 14:12-16

*மனுஷன் படுத்துக்கிடக்கிறான், வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை.*
*நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்.*
*மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்.*
*என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக.*
*இப்பொழுது என் நடைகளை எண்ணுகிறீர்; என் பாவத்தின்மேலல்லவோ கவனமாயிருக்கிறீர்.*

யோபு 19:23-26

*ஆ, நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்; அவைகள் ஒரு புஸ்தகத்தில் வரையப்பட்டு,*
*அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் கருங்கல்லிலே உளிவெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாயிருக்கும்.*
*என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.*
*இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்.*

மத்தேயு 7:21-23

*பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.*
*அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.*
*அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.*

மத்தேயு 22:14

*அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.*

யோவான் 3:16-17

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.*
*உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.*

யோவான் 5:24

*என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

1 கொரிந்தியர் 2:9

*எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;*

1 தெசலோனிக்கேயர் 4:13-18

*அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.*
*இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்.*
*கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.*
*ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.*
*பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.*
*ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.*

# மூல பாவம்

ஆதியாகமம் 3:1

தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.

ஆதியாகமம் 3:6-7

அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.

ஆதியாகமம் 3:14-15

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்;
உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.

இதுவே வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள முதல் பாவமாகும். சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் தந்திரமான சர்ப்பமானது சாப்பிடக்கூடாதென்று தடைசெய்யப்பட்ட ஒரு துண்டு பழத்தை சாப்பிடுவதில் ஏவாளை "வஞ்சித்தான்." எனவே அவள் அதைப் புசித்து, பின்னர் அதை தன்னுடைய கணவனுக்கும் கொடுத்தாள். அதுவே அவர்கள் நிர்வானிகளாயிருந்தனர் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள காரணமாயிருந்தது.

வெளிப்படையான கேள்விகள்: ஒரு சர்ப்பத்தினால் பேச முடியுமா? நிர்வாணமாயிருப்பதற்கும் ஆப்பிள் பழத்திற்கும் சம்மந்தம் என்ன? இவை எல்லாவற்றிற்குள்ளும் சர்ப்பத்தின் வித்து எங்கே பொருந்துகிறது?

சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது மிகவும் "தந்திரமாயிருந்தது" என்று வேதம் கூறுகிறது. அது ஒரு மனிதனைப் போன்றே நடக்கக்கூடியதாயும், பேசக்கூடியதாயும், அறிவாற்றல் கொண்ட உரையாடலை நிகழ்த்தக்கூடியதாயுமிருந்தது. ஆதாமினுடைய மனைவியை அவன் வஞ்சித்தப்பிறகு, தேவன் அவனை வயிற்றினால் நகர்ந்துசெல்லும் ஒரு சர்ப்பமாயிருக்கும்படி சபித்துவிட்டாரேயன்றி, தீங்கு செய்யப்பட்டு, வித்தானது விதைக்கப்படுவதற்கு முன்னர் அவன் அவ்வாறில்லை.

சர்ப்பம் ஒரு வித்தை உடையதாயிருந்ததென்றும், இருவித்துக்களுக்கிடையே தேவன் பகையை உண்டாக்கினார் என்றும் ஆதியாகமம் 3:15-ல் வேதம் கூறுகிறது. வெளிப்படையாகவே பிரிவினைக்கு முன்னமே சர்ப்பத்தின் வித்தானது ஏவாளுடைய மாம்சபிரகாரமான வித்தோடு கலந்துவிட்டது. எப்படி அவையாவுமே ஒரு ஆப்பிள் பழம் சாப்பிட்டதன் விளைவாக இருக்கக்கூடும்? அப்படியானால் பின்னால் வரும் சில வசனங்களைப் பார்ப்போம். "ஆதாம் *தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்;*



ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்,” ஆனால் ஆதாம் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தகப்பன் என்று அது கூறவில்லை என்பதைக் கவனியுங்கள்.

வேதத்தில் வித்தியாசமான “கனிகள்” இருக்கின்றன. நிச்சயமாகவே ஆப்பிளைப் போன்ற உண்மையான கனி உண்டு, அது வளர்ந்து உணவாகப் புசிக்கப்படுகிறது. நம்முடைய கிரியைகளும் கனி என்றே குறிப்பிடப்படுகிறது, அதாவது இயற்கையான பணிகளான விவசாயம் மற்றும் வியாபாரம் அல்லது ஆவிக்குரிய கிரியைகளான அற்புதங்களை நிகழ்த்துதல் மற்றும் சுவிசேஷத்தை பிரசங்கித்தல் போன்ற இப்படிப்பட்டவைகளும் கனிகள் என்றே குறிப்பிடப்படுகின்றன. அப்படியானால் கர்ப்பத்தின் கனியும் உண்டு, அது கருத்தரித்தல் மற்றும் பிள்ளைப்பேற்றைக் குறிக்கிறது.

ஆதாமும் ஏவாளும் ஒரு உண்மையான கனியைப் புசித்துவிட்டதால் தாங்கள் நிர்வாணமாயிருந்ததை உணர்ந்தனரா? அல்லது ஒரு மனிதனுக்கும் ஒரு ஸ்தீரீக்குமிடையே உண்டான சரீரப்பிரகாரமான உறவுமுறையினால் தங்களுடைய சரீரங்களின் குறிப்பிட்ட அந்த பாகங்களை மறைத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு உண்டானதா?

முழு மானிடவர்க்கமும் விழுந்துபோகக் காரணமாக அந்த நாளில் ஏதேனில் உண்மையாகவே நடந்தது என்ன?

> *தேவன் தம்மை மானீட சரீரத்தில் மீண்டும் சிருஷ்டித்துக்கொள்ள ஸ்திரீயின் வித்து சரியானதாய் இருந்ததுபோல, சாத்தானும் மானிட வர்க்கத்திற்குள்ளாக தனக்கு திறந்த வாசலைக் கண்டறிய சர்ப்பத்தின் வித்தும் சரியான வழியாய் இருக்கிறது. சாத்தானால் (அவன் ஒரு* **சிருஷ்டிக்கப்பட்ட** *ஆவிக்குரிய வர்க்கமாக மாத்திரமே இருக்கிறபடியால்) தேவன் தம்மை மறுபடியும் சிருஷ்டித்துக்கொள்வதுபோன்று தன்னை மறுபடியும் சிருஷ்டித்துக் கொள்வதுதென்பது கூடாதகாரியமாயிருந்தது. ஆகையால் அவன் எப்படி தன்னுடைய வித்தை உற்பத்தி செய்து, மானிட வர்க்கத்திற்கு அறிமுகப்படுத்தினான் அல்லது தம்மை அதற்குள் நுழைத்துக்கொண்டான் என்ற விபரத்தை ஆதியாகமம் சொல்லுகிறது. சாத்தானும் கூட “சர்ப்பம்” என்றழைக்கப்பட்டு நினைவுகூரப்படுகிறான். நாம் பேசிக்கொண்டிருப்பதோ அவனுடைய வித்தைக் குறித்து அல்லது மானிட வர்க்கதிற்குள் நுழைந்ததைக் குறித்ததேயாகும்.*
>
> *ஆதாம் ஏவாளை மாம்சபிரகாரமாக அறிவதற்கு முன்பே, சர்ப்பமானது அவனுக்கு முன்னே அவளை அறிந்திருந்தது. அதனால் பிறந்த ஒருவனே காயீனாய் இருந்தான். காயீன் “பொல்லாங்கனால்” (பிறந்தான், பிறப்பிக்கப்பட்டான்) I யோவான். 3:12*
>
> *…அதாவது ஏவாள் தன்னுடைய கருவறையில் இரண்டு குமாரர்களை (இரட்டையர்களை) தனித்தனியாக கர்ப்பந்தரித்தாள் என்பதே இந்தக் காரியத்தின் உண்மையாயுள்ளது. அவள் ஆபேலைக் கருத்தரிப்பதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்னதாகவே காயீனை கருத்தரித்ததினால் இரட்டையர்களை சுமந்து கொண்டிருந்தாள்.*

## சான்றாதாரங்கள்

ஆதியாகமம் 3:6-7
*அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.*
*அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது;* ***அவர்கள் தாங்கள் நிர்வானிகள் என்று அறிந்து,*** *அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.*
[எப்படி அவர்கள் ஒரு துண்டு பழத்தை புசித்ததினால் தாங்கள் நிர்வாணிகள் என்பதை அறிந்திருப்பார்கள்?]

ஆதியாகமம் 3:13-15
*அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார்.*
*ஸ்திரீயானவள்:* ***சர்ப்பம் என்னை வஞ்சித்தது,*** *நான் புசித்தேன் என்றாள்.*
*அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்;*
***உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்;*** *அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.*
[சர்ப்பம் ஒரு வித்தை உடையதாயிருந்தது. வெளிப்படையாகவே இது ஒரு வயிற்றினால் நகர்ந்து செல்லும் பாம்பைக் குறிப்பிட்டுக் கூறவில்லை.]

ஆதியாகமம் 3:20
*ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில்,* ***அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.***
[ஆதாம் ஏன் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தகப்பன் என்று அழைக்கப்படவில்லை?]

ஆதியாகமம் 4:1-2
*ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி,* ***காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள்.***
*பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான்.*
[முறைப்படி கருத்தரிக்கப்பட்டாலும் அல்லது முறைதவறி கருத்தரிக்கப்பட்டாலும் எல்லா ஜீவன்களுமே தேவனிடத்திலிருந்தே உண்டாகின்றன. சாத்தானால் ஜீவனை சிருஷ்டிக்க முடியாது.]

லூக்கா 3:38
*ஏனோஸ் சேத்தின் குமாரன்;* ***சேத் ஆதாமின் குமாரன்;*** *ஆதாம் தேவனால் உண்டானவன்.*
[ஆதாமின் வம்ச வரலாற்றில் முதல் பிறந்த காயீன் எங்கே இருக்கிறான்?]

I யோவான் 3:12
***பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்க வேண்டாம்;*** *அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே.*
[தேவன் தம்முடைய சொந்த சாயலில் ஆதாமை சிருஷ்டித்தார். காயீனின் பொல்லாங்கு எங்கிருந்து உண்டானது, ஆபேலின் நீதி எங்கிருந்து உண்டானது? அவர்களுடைய தன்மைகளை அவர்களுடைய தகப்பன்மார்களிடத்திலிருந்து உடைமையாகப் பெற்றிருந்தனர்.]

யூதா 1:14, 15
***ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும்*** *இவர்களைக்குறித்து: இதோ,... ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.*
[வேதத்தில் உள்ள ஆதாமின் வம்சவரலாற்றில் காயீன் எங்குமே இல்லை]





மல்கியா 4:1
இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்…

மல்கியா 4:5-6
இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.
நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.

பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம் உலகத்தின் அழிவைக் குறித்து வாக்களிக்கிறது. ஆனால் முடிவிற்கு முன்பாக எலியா தீர்க்கதரிசி திரும்பிவந்து, மேசியாவை அறிமுகப்படுத்துவார் என்று முன்னுரைக்கப்பட்டுள்ளது. யோவான்ஸ்நானன் இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிவிட்டான் என்று சிலர் கூறுகின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, யூதர்கள் மேசியா வரப்போவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். எலியாவின் ஆவியைக் கொண்ட ஒரு மனிதன் மேசியாவை அவர்களுக்கு அறிமுகம் செய்துவைப்பார் என்று மல்கியா தீர்க்கதரிசனம் உரைத்துள்ளதை அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால் யோவான் ஸ்நானன் வந்தபோது, அவர்கள் எதிர்பார்த்திருந்தபடியான எலியாவாக அவன் இருக்கவில்லை. எனவே எலியா ஏன் முதலில் வரவில்லை என்பதைக் குறித்து அவர்கள் இயேசுவிடம் கேள்விகேட்டபோது, “நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்” என்ற அந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாய் யோவான் இருந்தான் என்பதை அவர்களுக்கு அவர் தெளிவாகக் கூறினார். (எலியா என்ற எபிரெய பெயரிலிருந்து தோன்றிய கிரேக்கப் பெயரே எலியாஸ் என்று ஆங்கிலத்தில் உள்ளது.)

ஒரு சிறு கூட்ட ஜனங்கள் மாத்திரமே இந்த வெளிப்பாட்டினை ஏற்றுக்கொண்டனர். பெரும்பாலான பக்தியுள்ள தலைவர்களுக்கோ



யோவான் தங்களுடைய ஸ்தாபனங்களைக் குறித்து அதிகப் பொறாமையினால் குறைகூறும் ஒருவனாய் கருதப்பட்டான், அவர்கள் எலியாவின் ஆவியை மட்டும் அடையாளங்கண்டுகொள் ளாமலிருக்கவில்லை, அதைக் காட்டிலும் மோசமென்னவென்றால், அவர்கள் கிறிஸ்துவின் வருகையையுங்கூட தவறவிட்டுவிட்டனர்.

## ஆகையால் யோவான் ஸ்நானன் மல்கியாவினுடைய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினானா? முழுமையாக நிறைவேற்றவில்லை.

முதலாவது உலகமானது இன்னும் “சூளையைப் போல எரிந்து போய்விடவில்லை”, ஆகையால் மல்கியா 4-ம் அதிகாரத்தின் கடைசிப்பாகம் இன்னும் நிறைவேறவேண்டியதாயுள்ளது என்பதை நாம் அறிவோம். மேலும் வேதவாக்கியத்தின் மற்றொரு பாகமான, “பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்” என்பது யோவானால் நிறைவேற்றப்படவில்லை. இயேசுவானவர்தாமே, “எலியா முந்திவந்து (எதிர்காலம்) எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்” (மத்தேயு 17:11) என்று தீர்க்கதரிசனமுரைத்துள்ளார்.

## ஆகையால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக நாம் எலியாவிற்காக எதிர்நோக்கியிருக்க வேண்டும்.

இப்பொழுது இந்த நவநாகரீக நாளில், இது கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வருகைக்கான வேளையாய் உள்ளது. மல்கியா 4-ம் அதிகாரத்தின்படி எலியாவின் ஆவியானது மீண்டும் அவரை நமக்கு அறிமுகம் செய்துவைக்கும் என்று நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால் எலியா வரும்பொழுது, எந்த ஜனக் குழுவினர் அடையாளங்கண்டுகொள்வர்? அவருக்காக எதிர்நோக்கியிருக்கிறவர்கள் மாத்திரமே.

இந்த முடிவான வேளைக்கான மல்கியாவினுடைய தீர்க்கதரிசனத்தைக் குறித்து நாம் சிந்திக்கையில், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமானவருடைய இந்த வார்த்தைகளே சிந்தைக்கு வருகின்றன;

**ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள்...**

மத்தேயு 17:12





இந்த எலியாவின் வருகையை நாம் தவறவிட்டால் என்னவாகும்? வேதபாரகரும், பரிசேயரும் யோவான் ஸ்நானனை அடையாளங்கண்டுகொள்ளாதக் காரணத்தால் கிறிஸ்துவின் முதல் வருகையை தவறவிட்டதுபோல நாம் அவருடைய இரண்டாம் வருகையை தவறவிட்டுவிடுவோமா?



## சான்றாதாரங்கள்

2 இராஜாக்கள் 2:15

*எரிகோவில் பார்த்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனைக் கண்டவுடனே* ***எலியாவின் ஆவி எலிசாவின்மேல் இறங்கியிருக்கிறது*** *என்று சொல்லி, அவனுக்கு எதிர் கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கி:*

ஏசாயா 40:3-4

*கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும்,*
*பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவை சமமாக்கப்படும் என்றும்.* [யோவான் ஸ்நானன்]

மல்கியா 3:1

*இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன்,* [யோவான் ஸ்நானன்], ***அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்;*** *அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

மல்கியா 4:1-6

***இதோ, சூளையைப்போல எரிகிறநாள் வரும்;*** *அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்* [அது இன்னும் சம்பவிக்கவில்லை]*; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*
*ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.*
*துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும்நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின்கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*
*ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள்.*
***இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்குமுன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.***
*நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன்* ***பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும்* [யோவான் ஸ்நானன்]*, பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.*** [தற்கால எலியா]

மத்தேயு 11:10

*அதெப்படியெனில், இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம்பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்.* [மல்கியா 3:1, யோவான் ஸ்நானன்]

மத்தேயு 11:14

*நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்.* [யோவான் ஸ்நானன்]

மத்தேயு 17:11-12

*இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்.* [தற்கால எலியா]
*ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்; இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார் என்றார்.* [யோவான் ஸ்நானன்]

லூக்கா 1:17

*பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்.* [யோவான் ஸ்நானன்]

# வார்த்தை

எபிரெயர் 4:12

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும்,இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.

இந்த நவீன உலகத்தில் இருக்கிற அநேக கோட்பாடுகள், ஸ்தாபனங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளில் உண்மையான விசுவாசி எங்கே பொருந்துகிறான்? பேதுரு, யாக்கோபு, யோவான் இங்கே இன்றைக்கு பூமியின்மேல் இருப்பார்களாயின், அவர்கள் எந்த ஸ்தாபனத்தை சேர்ந்து கொள்வார்கள்? அற்புதங்கள் அவர்களுடைய ஊழியத்தை இன்னமும் பின்தொடருமா அல்லது அந்த நாட்கள் கடந்துபோய்விட்டன என்று அறிவிப்பார்களா? அவர்கள் ஞானாஸ்நானத்தின் பேரில் விட்டுக்கொடுத்து சமரசமாகிவிடுவார்களா? அவர்களுடைய சபை வார்த்தையிலிருந்து சற்று விலகியிருந்தாலும்கூட அவர்கள் தங்கள் சபையை பின்பற்றுவார்களா? அவர்கள் வேதாகமத்தை விசுவாசிப்பார்களா அல்லது இன்றைய பரிசேயர்களையும், சதுசேயர்களையும் விசுவாசிப்பார்களா?

இந்தக் கேள்வியை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்: இயேசு இங்கே இன்றைக்கு இருப்பாரேயானால், நீங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றுவீர்களா? நீங்கள் அவருடைய வார்த்தையை விசுவாசிப்பீர்களா?

அவர் தம்முடைய சீஷர்களுக்கு அளித்த அதே தருணத்தை உங்களுக்கும் அளித்துள்ளார். அவர் இந்தக் கைப்பிரதியை உங்களுடைய கரத்தில் அளித்து தம்முடைய வார்த்தைக்கு, தம்முடைய வேதாகமத்திற்கு திரும்பும்படி சுட்டிக்காட்டுகிறார். நீங்கள் உடன்படுவீர்களா?



புருஷரே, ஸ்திரீகளே, நண்பர்களே, கிறிஸ்து இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின பரலோகத்தின் தேவன் மரித்துவிடாமல் இன்னமும் உயிரோடிருக்கிறார் என்று நீங்கள் தெளிவாக உணருகிறீர்களா? அவர் தம்முடைய வார்த்தையை தாவீதிற்கு காத்துக்கொண்டாரென்றால், அவர் அதை எலியாவிற்கு காத்துக்கொண்டாரென்றால், அவர் அதை மோசேவிற்கு காத்துக்கொண்டாரென்றால், அவர் அதை எபிரெய பிள்ளைகளுக்குக் காத்துக்கொண்டாரென்றால், அவர் தானியேலுக்கு அதைக் காத்துக்கொண்டாரென்றால், அப்பொழுது அவர் அதை உங்களுக்கும் எனக்கும் காத்துக்கொள்வார்.



நீங்கள் இன்னும் அதிகமாக
அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

www.செய்தி.net

or

VOICE OF GOD RECORDINGS
INDIA OFFICE
No 28, Shenoy Road,
Nungambakkam, Chennai – 600 034, South India



# தேவரகசியம்

வெளிப்படுத்தின விசேஷம் 10:6

www.செய்தி.net

VOICE OF GOD RECORDINGS
INDIA OFFICE
NO 28, SHENOY ROAD,
NUNGAMBAKKAM, CHENNAI – 600 034, SOUTH INDIA

TAMIL